விலை: 50.00 பக்கங்கள் : 16

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

சங்கு 25 ஒலி 322 வள்ளுவர் ஆண்டு 2055

ஐப்பசி 19 செவ்வாய்க்கிழமை (05.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## வட மாகாணத்திலுள்ள இராணுவ முகாம்களை அகற்ற முடியாது

### பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பணிப்பாளர்



*(கொழும்பு)* வட மாகாணத்திலுள்ள இராணுவ முகாம்களை அகற்ற முடியாது எனப் பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் கேணல் நளின் ஹேரத் தெரிவித்தார்.

*(15ஆம் பக்கம் பார்க்க)*

## வடக்கில் காணிகளை விடுவிக்க நடவடிக்கை

### கிளிநொச்சியில் பிரதமர்

(கிளிநொச்சி)

வட மாகாணத்தில் இராணுவத்தினர் வசமுள்ள பொதுமக்கள் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பிரத 15

## கேப்பாப்பிலவு காணிகளை விடுவித்துத் தாருங்கள்

### ஹரிணியிடம் மகஜர் கையளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு காணிகளை விடுவித்துத் தருமாறு பிரதமர் ஹரிணியிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. 15

## உயர் நீதிமன்றால் தேர்தல் திகதிக்கு எதிரான மனு தள்ளுபடி

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலை இம் மாதம் 14ஆம் திகதி நடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம், அரசியல் யாப்புக்கு முரணானது என்று உத்தரவிடக் கோரித் 15

## எதிர்வரும் 10ஆம் திகதி ஜனாதிபதி அநுர யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)



ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எதிர் வரும் 10ஆம் திகதியாழ்ப் 15

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

இளைய தலைமுறையின் எதிர்பார்ப்பு!

ஊழலற்ற தூய கரங்கள்!!



3


சட்டத்தரணி

கேசவன் சயந்தன்

(முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்)

அறிவு - ஆற்றல் - ஆளுமை

(C-104)



சலுகைகளுக்காக உரிமைகளையோ, நோக்கங்களையோ தாரை வார்க்காது, வளமான தேசத்தில் வலிமையான தலைமைகளைத் தெரிவு செய்ய உங்கள் வாக்குகளை வீட்டுச் சின்னத்திற்கு இட்டு நீங்கள் விரும்பும் மூன்று வேட்பாளர்களின் இலக்கங்களுக்கு மேலேயும் புள்ளடியிடுங்கள்

(031)

பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்




இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி

பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்



அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

'இரு தேசங்கள் ஒரு நாடு'

இலக்கினை அடைய

ஒற்றைத் தலைமையில் ஓரணியாவோம்!

2

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

LLB (Hons) London

Barrister-at-Law (England & Wales)

Attorney-at-Law (Sri Lanka)

தலைவர்,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

பொதுச் செயலாளர்,அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்.

(C-101)



8

மேவிஸ் ஜீன்சியா

BA (Geo spl)


அபிவிருத்தி உத்தியோகத்தர்.

கலைஞர் , எழுத்தாளர்

தாயகம்

தேசியம்

சுயநிர்ணயம்



9

செல்வராசா கஜேந்திரன் (BBA)

பொதுச் செயலாளர்,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களது சர்வதேச விவகாரக் குழு உறுப்பினர் (2005-2010).

முன்னாள் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர்.

முன்னாள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தலைவர்.


முன்னாள் சிரேஸ்ட மாணவர் தலைவர் - மு/ஒட்டுசுட்டான் ம.வி.

உலகத் தமிழினம் தேசிய தலைவனின் பின்னால் அணிதிரண்டு நிற்கிறது என்பதனை உலகறியச் செய்த பொங்குதமிழ் பேரெழுச்சி உழைப்பாளர்களில் ஒருவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் ஆண்டு

# நினைவலைகள்



தோற்றம் 16 . 08 . 1969

மறைவு 05 . 11 . 2023

## அமரர். சிவானந்தம் ஸ்ரீதர்

Accountant (Zandra Mesh Industries (Pvt) Ltd)

மீளாத்துயிலில் நீங்கள்
ஆழ்ந்து
ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஆழ்மனதில் இன்னும்
நிழலாய்
நினைவுகளாய்
சக்தியாய்
சகலமுமாய்
எம்மோடு என்றும் நீங்கள்....

(C-1523)

66, கலைமன்ற வீதி,
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு
அருகாமையில் 100 பரப்புக்
காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- கடற்கரையை (Beach) முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- 20 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே.
- தரகர் தேவையில்லை.
- **பார்வையிடும் நேரம்**
  காலை 6 மணி தொடக்கம்
  மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம் (2565)

**077 814 7389, 077 986 5457**

# 8 திசையும் சூரியன்

தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF)

வெளிப்படைப் பேச்சு
அரசியல் நேர்மை
பதவிக்கு விலை
போகாமை

**வீ.ஆனந்தசங்கரி**



யாழ்-கிளி தேர்தல் மாவட்டம் (C-1301)

## அவசர தேவை

O⁻ இரத்த வகை
உடனடியாகத் தேவை.
தந்துதவுமாறு தாழ்மையுடன்
கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு : (2569)

**077 867 5560**

## விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில்
ரட்ணம் பாமசிக்கு அருகில்
46 அடி அகலமும் 216 அடி
நீளமும் கொண்ட
காணித்துண்டு உடன்
விற்பனைக்குண்டு. (2567)

**077 723 2535**

## யா/ யூனியன் கல்லூரி - தெல்லிப்பழை புவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிபாலன சபை பொதுக்கூட்டம்

இடம் : அம்பாள் ஆலய மண்டபம்
காலம் : 2024.11.18 திங்கள்
நேரம் : பிற்பகல் 2 மணி

உறுப்பினர்களையும் புதிதாக
இணையவுள்ள உறுப்பினர்களையும்
பங்குபற்றுமாறு அழைக்கின்றோம்.

தலைவர்
பரிபாலன சபை
யா/யூனியன் கல்லூரி

(C-1524)

# மணிவிழா வாழ்த்து





திருமதி தேவசகாயராசா
**யஸ்மின் யூலியற்**
(மனைப்பொருளியல் ஆசிரியர்)

**சேவை விபரம்**

- யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்
  பகுதி நேரம் : யா/ புங்குடுதீவு சுப்பிரமணியம் வித்தியாலயம்
  2000.01.03 – 2007.12.31
- யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்
  பகுதி நேரம் : யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்
  2008.01.02 – 2017.01.15
- யா/ சென் மேரீஸ் வித்தியாலயம்
  பகுதி நேரம் : யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
  2017.01.16 – 2024.11.04

(2557)

எமது பாடசாலையில் மனைப் பொருளியல் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி தேவசகாயராசா யஸ்மின் யூலியற் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வுக்காலம் சீரும்சிறப்புமாக அமைய இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: யா/சென்மேரீஸ் வித்தியாலயம் (OLR)
ஆசிரியர் நலன்புரிக் கழகம்

# 1535

## முறைப்பாடுகள் பதிவு

எதிர் வரும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1535 ஆக அதிகரித்துள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 376 முறைப்பாடுகளும், மாவட்டத் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 1159 முறைப்பாடுகளும் 35 ஏனைய முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

கடந்த 24 மணி நேரத்தில் 127 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்த வன்முறை சம்பவம் எதுவும் பதிவாகவில்லையென தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் இதுவரையான முறைப்பாடுகளில் 1248 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 287 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

(ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org













# வாக்களிப்பது தொடர்பில் தெளிவுபடுத்திய தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் முறைமை தொடர்பில், தேர்தல்கள் ஆணைக்குழு தெளிவுபடுத்தியுள்ளது.

அறிக்கையொன்றை வெளியிட்டுத் தேர்தல்கள் ஆணைக் குழு இதனைத் தெரிவித்துள்ளது.

பொலநறுவை, மொனராகலை மற்றும் கேகாலை ஆகிய தேர்தல் தொகுதிகளின் ஒருபக்கத்தில் மாத்திரம் வாக்குச்சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனினும் நாட்டின் ஏனைய தொகுதிகளில் வாக்குச்சீட்டுகள் இரண்டு பக்கங்களில் அச்சிடப் பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஒவ்வொரு வாக்காளருக்கும் ஒரு வாக்கினை அளிக்கலாம் என்பதுடன், அதனை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழுவிற்கு அளிக்க முடியும்.

வாக்களிக்கும் போது, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி மற்றும் சுயேட்சைக் குழுக்களின் பெயர் மற்றும் சின்னத்திற்கு முன்னால் உள்ள வெற்று பெட்டியில் புள்ளடியிட வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும் வேட்புமனு தாக்கல் செய்த வேட்பாளர்கள் 3 பேருக்கு மாத்திரம் விருப்பு வாக்கினை அளிக்க முடியும்.

அதற்காக வாக்குச்சீட்டில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒதுக்கப் பட்டுள்ள விருப்பு இலக்கத்திற்கு புள்ளடியிட முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# கோழி இறைச்சியின் விலை உயரும் அபாயம்

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சிக்கு அதிக தேவை ஏற்படக்கூடும் என அகில இலங்கை கோழிப் பண்ணை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பன்றி இறைச்சி விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டதன் மூலம் கோழி இறைச்சியின் தேவை அதிகரித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் மாதலி ஜயசேகர செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

எனினும் சில கோழிப் பண்ணை உரிமையாளர்கள் விலையை அதிகரிப்பதற்காகக் கோழி இறைச்சியைக் குளிர்சாதனப் பெட்டிகளில் சேமித்து வைப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாத இராசி பலன்கள்-2024

## காரிய அனுகூலம் உண்டாகும்



**கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் கேது - தைரிய வீரிய ஸ்தானத்தில் சூரியன் - சுகஸ்தானத்தில் புதன், சுக்கிரன் - களத்திர ஸ்தானத்தில் சனி (வ) - அஷ்டம ஸ்தானத்தில் ராகு - தொழில் ஸ்தானத்தில் குரு(வ) - விரய ஸ்தானத்தில் செவ்வாய் என கிரகநிலை உள்ளது.


**கிரகமாற்றம்:** 05.11.2024 அன்று களத்திர ஸ்தானத்தில் சனி வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 08.11.2024 அன்று சுகஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 13.11.2024 அன்று சுக ஸ்தானத்தில் புதன் வக்கிரம் ஆரம்பிக்கிறார். 16.11.2024 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சூரியன் சுகஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** உங்களது பணிகளை அடுத்தவரிடம் ஒப்படைக்காமல் நேரடியாக செய்யும் குணமுடைய சிம்ம இராசியினரே! இந்த மாதம் எல்லா வகையிலும் நன்மை உண்டாகும். தனலாபத்தை தருவார். அடுத்தவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பாலினத்தாரால் செலவு ஏற்படும். கோபத்தால் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். பணவரத்து கூடும். காரிய அனுகூலம் உண்டாகும்.

தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். விற்பனை அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்திசாதூரியத்தால் வேலைகளை திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். பதவி உயர்வு கிடைக்கலாம்.

குடும்பத்தில் நிம்மதி காணப்படும். விருந்து நிகழ்ச்சியில் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். குழந்தைகளின் செயல்களால் பெருமை அடைவீர்கள். பெண்கள் உதவி கேட்டு உங்களை நாடி வருபவர்களுக்கு தேவையான உதவிகளை செய்வீர்கள். திடீர் செலவு உண்டாகலாம்.

அரசியல்வாதிகள் சகாக்களை பகைத்துக் கொள்ள வேண்டாம். கட்சித் தலைமையின் ஆதரவு கிட்டும். கட்சி மேல்மட்டத்தால் அலைக்கழிக்கப்படுவர். கலைத்துறையினரின் படைப்புகளுக்கு மதிப்பு, மரியாதை கூடும். நல்ல வரவேற்பு கிடைக்கும். உங்களது கலைத்




திறன் வளரும். மாணவர்கள் சக மாணவர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. கல்வியில் அதிக கவனம் தேவை.

**மகம்:** இந்த மாதம் வீண் மனக் கவலையை உண்டாக்கும். எதிர்பாராத செலவு ஏற்படும். அலைச்சலால் சரியான நேரத்திற்கு உணவு உண்ண முடியாத நிலை ஏற்படலாம். பணவரவு இருக்கும். வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் ஏற்படும்.

**பூரம்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத போட்டிகள் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் அதிக முதலீடு செய்யும் முன் யோசிப்பது நல்லது. கடன் விடயங்களில் கவனம் தேவை. பழைய பாக்கிகள் சிறிது தாமதத்திற்கு பின் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும்.

**உத்திரம் 1 ஆம் பாதம்:** இந்த மாதம் குடும்பத்தில் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். விருந்தினர்கள் வருகையால் செலவு கூடும். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும், நெடுந்தூர பயணங்களின் போதும் கவனமாக இருப்பது நல்லது.


**பரிகாரம்:** தினமும் சூரிய நமஸ்காரம் செய்து சிவனை வணங்க பிரச்சினைகள் குறையும். காரிய வெற்றி உண்டாகும்;

**அதிஷ்ட கிழமைகள்:** வியாழன், வெள்ளி;

**சந்திராஷ்டம தினங்கள்:** 12, 13;

**அதிர்ஷ்ட தினங்கள்:** 5, 6, 7

## விருப்பங்கள் கைகூடும்



**கிரகநிலை** - இராசியில் கேது - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் புதன், சுக்கிரன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி (வ) - களத்திர ஸ்தானத்தில் ராகு - பாக்கிய ஸ்தானத்தில் குரு(வ) - லாபஸ்தானத்தில் செவ்வாய் என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றம்:** 05.11.2024 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் சனி வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 08.11.2024 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 13.11.2024 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் புதன் வக்கிரம் ஆரம்பிக்கிறார். 16.11.2024 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து சூரியன் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** எந்த ஒரு வேலையையும் மிகவும் பொறுமையாகவும், பொறுப்புடனும் செய்து முடிக்கும் கன்னி இராசியினரே! இந்த மாதம் எல்லா காரியங்களும் அனுகூலமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும். எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவலாக வரும். விருப்பங்கள் கைகூடும். நண்பர்கள் மத்தியில் மரியாதையும், அந்தஸ்தும் உயரும். மற்றவர்களிடம் பேசும்போது கோபத்தை குறைத்து பேசுவது நல்லது. பணவரத்து இருக்கும்.

தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான நிலை காணப்படும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு வெற்றி பெறுவார்கள். மேலதிகாரிகள் ஆதரவும் கிடைக்கும்.

குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும். உங்கள் சொற்படி பிள்ளைகள் நடந்து கொள்வது மனதுக்கு இதமளிக்கும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவார்கள். பெண்கள் நிதானமாக பேசுவது நன்மை தரும். பணவரத்து திருப்தி தரும். எதிர்பார்த்த தகவல்கள் வரும்.

அரசியல்வாதிகள் சகாக்களுடன் உரிமையாகப் பேசி பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். எனினும் கட்சி மேல்மட்டத்தில் மதிக்கப்படுவீர்கள். கலைத்துறையினர் மூத்த கலைஞர்களால் ஆதாயமடைவர். பழைய நிறுவனத்திலிருந்து புதிய




வாய்ப்பு தேடிவரும். சம்பள விடயத்தில் கறாராக இருப்பது அவசியம். மாணவர்கள் சக மாணவர்களுடன் பழகும் போது கவனம் தேவை. பாடங்கள் எளிமையாக தோன்றும்.

**உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் வீண் அலைச்சல் உண்டாகும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் ஏற்படும். வாக்கு வன்மையால் அனுகூலம் உண்டாகும். எந்தக் காரியத்தையும் யோசித்து செய்வது நல்லது. பணம் சார்ந்த கஷ்டங்கள் குறையும். காரிய வெற்றியும், நன்மையும் உண்டாகும்.

**அஸ்தம்:** இந்த மாதம் காரிய அனுகூலம் உண்டாகும். எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிக்க தேவையான உதவிகள் கிடைக்கும். சுயநம்பிக்கை அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். எந்த பிரச்சினையும் எதிர்கொள்ளும் தைரியம் உண்டாகும்.

**சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் மனதை கவலை கொள்ளச் செய்த பிரச்சினைகளில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்பட்டு சாதகமான பலன் கிடைக்கப் பெறலாம். தொழில், வியாபாரம் முன்னேற்றப் பாதையில் செல்லும், சிறப்பாக செயற்பட முடியும் என்ற நம்பிக்கை ஏற்படும். எதிர்பார்த்த பண உதவியும் கிடைக்கப் பெறும். வேலை தேடி கொண்டு இருப்பவர்களுக்கு உத்தியோக வாய்ப்புகள் வரும். முக்கிய நபர்களின் உதவியும் கிடைக்கும்.

**பரிகாரம்:** கிருஷ்ண பரமாத்மாவை வணங்க கஷ்டங்கள் தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்;

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, வியாழன்;

**சந்திராஷ்டம தினங்கள்:** 14, 15;

**அதிஷ்ட தினங்கள்:** 8, 9

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











## 80 கிலோ கஞ்சா மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பொலிஸ் பிரிவில் 80 கிலோ கேரள கஞ்சா நேற்று அதிகாலையில் மீட்கப்பட்டுள்ளது. கஞ்சா கடத்தல் தொடர்பில் இராணுவ புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சிறப்பு அதிரடிப் படையினருடன் இணைந்து சுற்றி வளைக்கப்பட்ட போது 80 கிலோ கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கஞ்சா பூநகரி பொலிஸார் ஊடாக நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (நி-6-8)




# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு :1985 - இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 65
7 இல் சூரி செவ்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, சாரதி
எதிர்பார்ப்பு: அரச/ தனியார் தொழில்
தொ.இ: B/14899

பிறப்பு: 1993-இந்து
நட்சத்திரம்: பரணி
9 இல் சூரி செவ்
கி.பா: 31 1/4
உயரம் : 5'5"
தகைமை/தொழில்: BSc, Engineer (Aus)
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: B/14900

பிறப்பு: 1995 - இந்து
நட்சத்திரம் : பரணி
1 இல் செவ்
கி.பா: 72
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:- BSc, QS
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/12850

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1992 -இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா- 25 3/4
உயரம் : 5'4"
தகைமை/தொழில்:. PHD, Teaching Assistant
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: G/11178

பிறப்பு -1997 - இந்து
நட்சத்திரம்: மூலம்
உயரம் : 5'4"
தகைமை/தொழில்: Engineer(Final Year)
எதிர்பார்ப்பு: உயர்வான கல்வித்தகைமை
தொ.இ: G/14204

பிறப்பு -1993 -இந்து
நட்சத்திரம் - பூசம்
உயரம் : 5'6"
தகைமை/தொழில்: Diploma, Teacher
எதிர்பார்ப்பு : நற்குணமுள்ள ஆண்
தொ.இ: G/14208

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசாங்கம் முன் வரவில்லை

### ரமேஷ் பத்திரன விசனம்



(கொழும்பு)

பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு குறைந்தளவான வாக்குப் பெரும்பான்மையே கிடைக்கும் என முன்னாள் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

தேர்தல் நிலவரம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்த அவர், தபால்மூல வாக்களிப்பில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவதாகவும், சம்பளம் மற்றும் கொடுப்பனவு அதிகரிக்கப்படாமை குறித்து அரச சேவையாளர்கள் அதிருப்தி கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் "அரசாங்கம் தேர்தல்வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு முன்வரவில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டங்களே நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ரமேஷ்பத்திரன தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போதைய அரசாங்கத்திற்கு தேர்தலில் நூற்றுக்கு 43 வீதமே வாக்குப்பெரும்பான்மை கிடைத்துள்ளது எனவும், எஞ்சியுள்ள 58 வீதம் எதிர்க்கட்சியை சாரும் எனவும், எனவே பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு குறைந்தளவான வாக்குப்பெரும்பான்மையே கிடைக்கும் எனவும் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார். (நி-8)

## பெரிய வெங்காய விலை சடுதியாக அதிகரிப்பு

(கொழும்பு)

சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

நாட்டின் சில பகுதிகளில் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் விலை 340 ரூபாவாக உயர்ந்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


அண்மையில் பெரிய வெங்காயத்திற்கான விசேட இறக்குமதி வரி 20 ரூபாவினால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைவாக 10 ரூபாவாக இருந்த பெரிய வெங்காயத்தின் இறக்குமதி வரியை 30 ரூபாவாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சந்தையில் தற்போது போதியளவு வெங்காயம் கையிருப்பில் இல்லாததால் விலை உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்களம்




## மீனவர்களின் நெருக்கடிகளுக்கு தீர்வை பெற்றுத் தருவேன்

### சசிகலா ரவிராஜ்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் வாழும் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கும் அங்கு வாழும் 300 இற்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதார பிரச்சினைகளுக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்கு பின்னர் உடனடித் தீர்வை பெற்றுத் தருவதாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பாளர் சசிகலா ரவிராஜ் வாக்குறுதி அளித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இந்த வாக்குறுதியை வழங்கியிருந்தார்.

கடற்றொழிலை வாழ்வாதாரமாக கொண்டிருக்கும் மீனவ மக்கள் தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பில் இதன் போது சசிகலா ரவிராஜின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதற்கு பதிலளித்த சசிகலா, தேர் தலில் வெற்றிபெற்று பாராளுமன்றம் செல்லும் சூழல் ஏற்படும் பொழுது நிச்சயமாக மீனவர்களுடைய பிரச்சினைகள் சம்பந்தமாக கவனத்திலெடுத்து உரிய தீர்வைப் பெற உதவுவேன் என்ற உறுதிமொழியை வழங்கியிருந்தார்.

குறித்த பிரதேசத்தில் 300 இற்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்கிறார்கள் என்ற தகவல் இந்த மக்கள் சந்திப்பினூடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

எனவே பெண்கள் தலைமைத்துவம் தாங்கும் குறித்த குடும்பங்கள் தொடர்பில் தான் அதிகளவில் அவதானம் செலுத்துவதாகவும் என்னுடைய வெற்றி இந்த பெண்களின் வாழ்வில் குறிப்பாக வடக்கு மாகாணத்தின் ஒட்டுமொத்த பெண்களுக்கும் ஒரு சிறப்பான மாற்றத்தை உருவாக்க உதவுவதாக சசிகலா ரவிராஜ் தெரிவித்தார். (6-8)

## சிங்களவர்களின் நன்மைக்காகவே அரசு செயற்படும்

### கஜேந்திரகுமார்



(வவுனியா)

சிங்கள சொந்தங்களின் நன்மைக்காக மட்டுமே இந்த அரசாங்கம் இயங்கும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் அக்கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாபெரும் பிரசாரப் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள கலைமகள் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

முன்னணியின் வன்னித் தேர்தல் மாவட்டத்துக்கான முதன்மை வேட்பாளர் எஸ்.தவபாலன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிங்கள மக்கள் எல்லோரையும் பிழையானவர்கள் என நாங்கள் கூறவில்லை.

சிங்கள மக்களுடைய அரசியல் மிகச் சிறப்பாக ஒரு இனவாதத்தின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே தமிழ் பேசும் மக்களுக்கான அபிவிருத்தி என்பது அரசாங்கத்திடம் இருந்து ஒரு போதும் எமக்கு கிடைக்காது. எனவே சிந்தித்து வாக்களியுங்கள் என அவர் தெரிவித்தார். (ரி-8)

## உயிரிழந்த உறவுகளுக்கு நினைவுத்தூபி-அங்கஜன்



(சாவகச்சேரி)

யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு எனது செலவில் நினைவுத் தூபி அமைக்கத் தயார் என ஜனநாயக தேசிய கூட்டணியின் யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் யுத்தம் மௌனித்து 15வருடங்கள் கடந்து விட்ட போதிலும் தமிழ் மக்கள் யுத்த வடுவில் இருந்து மீள முடியாமல் உள்ளனர்.

அத்தோடு தமிழ் மக்களுக்கு உறவுகளை நினைவு கூர்வது கூட சவால் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் பொதுவான நினைவுத்தூபி ஒன்றை அமைத்து யுத்தத்தில் உயிரிழந்த அனைவருக்கும் அஞ்சலி செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு அரசாங்கம் அனுமதி வழங்கும் பட்சத்தில் எனது சொந்தச் செலவில் பொதுவான நினைவுத் தூபியை நிறுவ நாட்டில் நல்லிணக்கத்தை மலரச் செய்வது சிறந்த ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை உருவாக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (6-8-30)

## அரச அதிபரை சந்தித்த தேர்தல் கண்காணிப்பு குழுவினர்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ANFREL தேர்தல் கண்காணிப்பு குழுவினர் யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான ம.பிரதீபனை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாராளுமன்றத் தேர்தல் முன்னாயத்த செயற்பாடுகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

இச் சந்திப்பில் ANFREL தேர்தல் கண்காணிப்பு குழுவின் சர்வதேச கண்காணிப்பாளர் ஹெரி விபோவோ ரிக்சாக்சொனா மற்றும் எஸ்.கலாராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (6-8-33)

## ஜ.த.தே. கூட்டணியின் அலுவலகம் வவுனியாவில் திறப்பு



(குருமன்காடு)

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் அலுவலகம் நேற்று முன்தினம் வவுனியா, திருநாவற்குளம் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது.

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் பங்காளி கட்சியான ஜனநாயக போராளிகள் கட்சியின் வேட்பாளர்களான க.துளசி மற்றும் க.யசோதினி ஆகியோரின் பிரசார நடவடிக்கைகளுக்காக குறித்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது முன்னாள் போராளிகள், பொதுமக்கள், தமிழ் தேசியப் பற்றாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டு இருந்ததோடு வேட்பாளர்களான க.துளசி மற்றும் க.யசோதினி ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

அதேவேளை தாண்டிக்குளம் பகுதியிலும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் அதிகாரிகள், ஆணையாளர்களை கொழும்பிற்கு அழைத்த ஆணைக்குழு

(கொழும்பு)

பாராளுமன்ற தேர்தல் நடவடிக்கைகளுக்காக மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாவட்ட தேர்தல் ஆணையாளர்களும் இன்று கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

வாக்கு எண்ணிக்கை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் தேர்தல் ஆணையாளர்களுக்கு சிறப்பு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட உள்ளன. பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இந்த அதிகாரிகள் கொழும்புக்கு அழைக்கப்படுவது இது இரண்டாவது தடவையாகும்.

இதேவேளை பாராளுமன்றத் தேர்தலுடன் தொடர்புடைய பாரதூரமான வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை என தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. (நி-8)

# பொதுத்தேர்தலின் பின்னர் ஊழல் மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி

## சுனில் ஹந்துனெத்தி தெரிவிப்பு



(கொழும்பு)

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தற்போது நாட்டில் அரசியல் ஸ்திரதன்மையினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையே முன்னெடுத்து வருகின்றார் என தேசிய மக்கள் சக்தியின் மாத்தறை மாவட்டத் தலைவர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே இவ்வாறு தெரிவித்துள்ள அவர், ஜனாதிபதியின் செயற்பாடுகளை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசியல் ஸ்திரப்படுத்தலின் பின்னரே நாட்டில் பொருளாதார ஸ்திரதன்மை ஏற்படுத்தப்படும் எனவும், பொதுத்தேர்தலில் நாம் புதிதாக கொள்கைத் திட்டங்கள் எதனையும் முன்வைக்க தேவையில்லை எனவும், அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகள் பொதுத்தேர்தலின் பின்னர் நிறைவேற்றப்படும் எனவும், நாட்டில் அரசியல் ஸ்திரதன்மை பொருளாதார ஸ்திரதன்மை ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் ஊழல் மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

மேலும், சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப் படுத்தப்படும் எனவும், ஜனாதிபதி தேர்தலில் தாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் எனவும் அதற்கான அதிகாரத்தினையே தாம் பொதுத் தேர்தலில் கோருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# மின்கட்டண குறைப்பு போதுமானதாக இல்லை

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

(கொழும்பு)

மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பில் இலங்கை மின்சார சபை முன் வைத்துள்ள கட்டணக் குறைப்பு போதுமானதாக இல்லை என பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

கட்டணத் திருத்தம் தொடர்பான புதிய பிரேரணையை சமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அதன் தொடர்பாடல் பணிப்பாளர் ஜெயநாத் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன்படி குறித்த பிரேரணையை எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக் குழுவில் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி இலங்கை மின் சார சபை மின்சாரக் கட்டண திருத்தம் தொடர்பான யோசனையொன்றை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்திருந்தது.


அதன் போது மின் கட்டணத்தை 4 முதல் 11 சதவீதம் வரை குறைக்க இலங்கை மின்சார சபை முன் மொழிந்தது.

எவ்வாறாயினும் இந்த வருடத்தின் கடந்த சில மாதங்களில் பெற்ற இலாபத்துடன் ஒப்பிடுகையில் இலங்கை மின்சார சபையினால் குறைக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டண வீதம் போதுமானதாக இல்லை என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், புதிய முன்மொழிவை சமர்ப்பித்த பின்னர் அது தொடர்பான எதிர் முன்மொழிவைத் தயாரிக்க எதிர்பார்ப்பதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-8)


## மரண அறிவித்தல்

பிறப்பு 05 - 08 - 1942



இறப்பு 04 - 11 - 2024

### பிலிப்புப்பிள்ளை பற்றிக்துரைராசா

கரணவாய் கிழக்கை பிறப்பிடமாகவும் கரவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்புப்பிள்ளை பற்றிக்துரைராசா கடந்த 04.11.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை- விக்ரோரியா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து- லூர்த்துமேரி தம்பதியரின் அன்பு மருமகனும் பற்றிமாவின் (இராசாத்தி) பாசமிகு கணவரும் வின்சுலா(லண்டன்), ஜேம்ஸ் (லண்டன்), நிறஞ்சலா ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜோன்சன்(லண்டன்), மஞ்சுளா (லண்டன்), லீன்ரஸ்(உப அதிபர், யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் பற்றிக் (லண்டன்),ஜோர்ஜ்/லண்டன்), அஸ்மிகா(லண்டன்), சுயோஸ்தன் (லண்டன்), அமஸ்தன்(லண்டன்), அஜிஸ்தன்(லண்டன்), லக்ஷனா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவரான பிரான்சிஸ் ஞானேந்திரனின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 05.11.2024 இன்று செவ்வாய்க்கிழமை புனித பரலோக அன்னை ஆலயத்தில் 3.00 மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(சி-1520)

கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

தகவல் - குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு -077 898 3129


# வெளிநாடு செல்கிறார் ரணில்

(கொழும்பு)

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் பின்னர் விடுமுறையைக் கழிப்பதற்காக தாம் வெளிநாடு செல்ல உள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேர்தலின் பின்னர் விடுமுறைக்காக வெளி நாட்டிற்கு பயணம் செய்ய திட்டமிட்டுள் ளதாக அவர் தெரிவித்தார். (நி-8)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 300 | 400 | 500 | 400-500 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 250 | 300 | 350 | 400 |
| தக்காளி | 200 | 300 | 280 | 200 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 230 | 100-120 | 160 |
| கோவா | 200 | 250 | 250 | 200 | 200 |
| கரட் | 120 | 200 | 200 | 150 | 200 |
| பூசணி | 100 | 100 | 100 | 110 | 150 |
| புடோல | 160 | 180 | 150 | 200 | 200 |
| வாழைக்காய் | 60 | 100 | 150 | 80-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 280 | 300 | 150-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 320 | 250 | 280 | 280 | 400 |
| பாகறகாய் | 500 | 550 | 450 | 600 | 600 |
| வெண்டக்காய் | 100 | 100 | 120 | 80-120 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 260 | 100 | 200 |
| பயற்றங்காய் | 400 | 300 | 200 | 250-300 | 250 |
| லீக்ஸ் | 250 | 280 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 120 | 120 | 150 | 100 | 200 |
| கறிமிளகாய | 550 | 600 | 350 | 400-450 | 600 |
| முருங்கைக்காய | 300 | 150 | 100 | 30-50 | 200 |
| போஞ்சி | 250 | 350 | 350 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | 300 | 350 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 120 | 100 | 150 |
| தேசிக்காய் | 300 | 400 | 400 | 300-400 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 80-160 | 120-180 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 600 | 1000 |
| வெங்காயப்பூ | 350 | 500 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 120 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 120 | -- | 60 | -- | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## காற்று மாசுபாடு காரணமாக

# பாடசாலைகளை மூடும் பாகிஸ்தான் அரசாங்கம்

(இஸ்லாமாபாத்)

காற்று மாசுபாடு காரணமாக பாகிஸ்தானின் லாகூரில் உள்ள பாடசாலைகளை மூட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்படி ஒரு வார காலத்திற்கு பாடசாலைகளை மூடுவதற்கு பாகிஸ்தான் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


அத்துடன் அலுவலகப் பணியாளர்களில் 50% பேர் வீட்டிலிருந்து வேலை செய்யும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் மக்கள் முடிந்தவரை வீட்டிலேயே இருக்க வேண்டும் என்றும் தேவையற்ற பயணங்களைத் தவிர்க்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



மேலும் பாகிஸ்தானின் இரண்டாவது பெரிய நகரமாக கருதப்படும் லாகூர் உலகின் மிகவும் மாசுபட்ட நகரங்களின் பட்டியலில் இரண்டாவது முறையாக முதலிடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு

## 9 பேர் உயிரிழப்பு



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் நுசா டெங்கரா மாகாணத்தில் காணப்படும் பிளோர்ஸ் தீவில் உள்ள எரிமலை நேற்று முன்தினம் வெடித்துச் சிதறியதில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை குறித்த எரிமலையில் வெளியேறிய தீக்குழம்பினால் சிலர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த எரிமலையானது சீற்றத்துடன் காணப்படுவதால் அப்பகுதி மக்களை பாதுகாப்பான பகுதிக்கு அழைத்து செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

## மன்னர் மீது சேற்றை வீசி

# கூச்சலிட்ட மக்கள்

## ஸ்பெயினில் பரபரப்பு சம்பவம்

(ஸ்பெயின்)

ஸ்பெயின் நாட்டில் பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடச் சென்ற மன்னர் பெலிப் மற்றும் ராணியார் லெதிசியா மீது மக்கள் சேற்றை வீசி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.


மேலும் பிரதமர் மற்றும் உள்ளூர் அதிகாரிகள் மீதும் சேற்றை வீசி கொலைகாரர்கள் எனவும் மக்கள் கூச்சலிட்டுள்ள சம்பவமானது அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்பெயினில் தற்போது கடும் மழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதுடன் 200 இற்கும் அதிக மானவர்கள் பலியாகியுள்ளனர்.

இந்நிலையிலே கடந்த செவ்வாய்க்கிழமையன்று வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என்று குடியிருப்பாளர்களை வலியுறுத்தும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஏன் வெள்ளம் பெருக்கெடுத்த பிறகு அனுப்பப்பட்டது என்ற கோபத்தினாலேயே மக்களை பார்வையிட வந்த மன்னர் மற்றும் ராணியார் மீது மக்கள் தங்களது கோபத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் நடந்த துயரச் சம்பவங்களுக்கு பொறுப்பேற்று பிரதமர் மற்றும் வலென்சியாவின் பிராந்திய தலைவர் ஆகியோர் பதவி விலக வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.



எதிர்பாராமல் மக்கள் சேற்றை வீசவும் மெய்க்காப்பாளர்கள் குடைகளைப் பயன்படுத்தி பிரதமரை விரைவாக அங்கிருந்து வெளியேற்றியுள்ளனர்.


ஆனால் மன்னர் பெலிப் தமது பயணத்தை தொடர்ந்ததுடன் பாதிக்கப்பட்ட பல பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டுள்ளார்.

இந்த நிலையில் பிராந்தியத்தில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இரண்டாவது நகரத்திற்குச் செல்வதற்கான மன்னரின் திட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டதாக ஸ்பெயினின் அரண்மனை தகவல் வெளியிட்டுள்ளது.

இதனிடையே, ஞாயிற்றுக்கிழமை வானிலை ஆய்வு மையம் மீண்டும் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளதுடன் தற்போது பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் மேலும் கனமழை பெய்யும் என்று கணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# உலகப்

# அமெரி



இவ்வாறு நடைபெறவுள்ள இந்த தேர்தலில் முன்கூட்டியே நடை பெற்ற வாக்குப் பதிவில்,

6.8
அ
தா
ளது
நா
பதி
வு
ளிச்
வா
வர்

# பள்ளத்தில்

- 36 பய
- 24 பே
- உத்தர



(டில்லி)

உத்தரகாண்டின் அல்மோரா மாவட்டத்தில் நேற்று திங்கட்கிழமை பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து ஒன்று 200 மீற்றர் ஆழமான பள்ளத்தில்

க
ளது
பே
பய
மு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கம் ஆவலுடன் எதிர்பார்க்கும்
# ...ரிக்க ஜனாதிபதி தேர்தல் இன்று!



**(வோஷிங்டன்)**

**உலகின் வல்லரசான அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் இன்று ஐந்தாம் திகதி நடைபெறவுள்ளது.**



6.80 கோடிக்கும் அதிகமான அமெரிக் கர்கள் வாக்களித்த தாக தகவல் வெளியாகியுள் ளது.

அமெரிக்காவில் வாக்குப் பதிவு நாளுக்கு முன்பாகவே வாக்குப் பதிவு மையங்களில் நேரடியாக வும் தபால் மூலமாகவும் வாக்க ளிக்கும் வசதி உள்ளது.

தேர்தல் நாளன்று மோசமான வானிலை, வாக்களிக்க நீண்ட வரிசையில் காத்திருத்தல், வாக்குப் பதிவு நாளன்று ஏற்படக்கூடிய எதிர்பாராத சிக்கல்கள் உள்ளிட் டவற்றை வாக்காளர்கள் எதிர்கொள்ளாமல் இருக்க இந்த நடைமுறை கடைப் பிடிக்கப்படுகிறது.

இந்நிலையில் அந்நாட் டில் ஜனாதிபதி தேர் தலையொட்டி முன் கூட்டியே வாக்குப் பதிவு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது.

இதில் அமெரிக்கா முழுவதும் கோடிக்கணக் கான வாக்காளர்கள் ஆர் வத்துடன் வாக்களித்த னர்.

மொத்தம் 6.80 கோடிக் கும் அதிகமான அமெரிக் கர்கள் வாக்களித்ததாக தகவல் வெளியாகியுள் ளது.

இந்தத் தேர்தலில் ஜன நாயக கட்சி வேட்பாளராக தற்போதைய உப ஜனாதி பதி கமலா ஹாரிஸ், குடி யரசு கட்சி வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகி யோர் போட்டியிடுகின்ற னர்

இதேவேளை இந்த தேர்தலில் கமலா ஹாரிஸ் மற்றும் ட்ரம்ப் இடையே கடும் போட்டி நிலவுவதாக தகவல்கள் தெரிவிக்கின் றன. (நி-8)

# ...ில் கவிழ்ந்த பேருந்து
## ...6 பயணிகள் உயிரிழப்பு
## ...4 பேர் காயம்
## ...த்தரகாண்டில் சோகம்



...கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள் ளது.

இந்த விபத்தில் குறித்த பேருந்தில் பயணித்த 60 பயணிகளில் 36 பேர் உயிரி ழந்துள்ளதாகவும் 24 பேர் காயமடைந்துள்ளதாகவும் இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் 4 பேர் ஆபத்தான நிலை யில் உள்ளனர். அவர்க ளில் மூவர் விமானம் மூலம் ரிஷிகேஷ் எய்ம்ஸ் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

விபத்தின் பின்னர், பொலிஸார் மற்றும் தேசிய, மாநில பேரிடர் மீட்பு படை யினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்ட மையும் குறிப்பிடத்தக் கது. (நி-8)

# லெபனான் களமுனைக்கு நெதன்யாகு திடீர் விஜயம்



(பெய்ரூட்)

தெற்கு லெபனானில் தமது தாக்குதலை இஸ் ரேல் இராணுவம் தீவிரப் படுத்தியுள்ள நிலையில் அந்நாட்டு பிரதமர் பெஞ் சமின் நெதன்யாகு எல் லைப்பகுதிக்கு விஜயம் செய் துள்ளதாக இஸ்ரேலிய ஊட கங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

பெஞ்சமின் நெதன்யாகு நேற்று முன்தினம் அதி காலை லெபனான் எல் லைக்கு விஜயம் செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் இஸ் ரேலிய பிரதமர் அலுவலக அறிக்கையை மேற் கோள்காட்டியே குறித்த செய்தி வெளியிடப்பட்டுள் ளது.

மேலும் இந்த விஜய மானது ஒரு மாதத்திற்குள் முன்னெடுக்கப்பட்ட இர ண்டாவது விஜயம் என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் லெப னான் மீதான இஸ் ரேலிய தாக்குதல்களால் இறந்தவர் களின் எண்ணிக்கை 2,986 ஆக உயர்ந் துள்ளதாக லெபனான் சுகாதார அமைச்சகம் தெரி வித்துள்ளது.

மேலும் ஒக்டோபர் 2023 முதல் காயம டைந்தவர்களின் எண் ணிக்கை 13,402 ஆக உயர்ந்துள்ளதாக கூறப்ப டுகிறது.

இதன்படி கடந்த 24 மணி நேரத்தில் மாத்திரம் 18 பேர் உயிரிழந்துள்ள தாகவும் 83 பேர் காய மடைந்ததாகவும் தாக்கு தலில் கொல்லப்பட்டவர்க ளில் 772 பேர் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்றும் லெபனான் சுகாதார அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை- கொக்குவில் 2025 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 01.01.2025 ஆம் திகதி தொடக்கம் 31.12.2025 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 05.11.2024 - 18.11.2024 ஆம் திகதி பி.ப 3.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 19.11.2024 ஆம் திகதி மு.ப 10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி : 19.11.2024 ஆம் திகதி மு.ப 10.15 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம்,நல்லூர் பிரதேச சபை

1. கேள்விப் பத்திரங்கள் இரண்டு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளையும் செயலாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5,கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
2. அட்டவணையில் உள்ளவாறு மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி கேள்விப்பத்திரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்விப் படிவக்கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும் .
5. மரக்கறிச் சந்தைக்கான கேள்வியில் சித்தியடையும் கேள்விக்காரர் உள்ளூராட்சி ஆணையாளரின் 03/2015 இலக்கமும் 09.11.2015 ஆம் திகதியும் உடைய சுற்றுநிருபத்திற்கு அமைவாக இணங்குதல் வேண்டும்.
6. மரக்கறிச் சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டுவரும் பொருட்களின் விற்பனைவிலையில் 4% ற்கு மேல் வரி அறவிடக்கூடாது. என்பதுடன், விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய சந்தைக்கு வரும் உற்பத்தியாளர்களிடமிருந்து தரகுப் பணம் எதுவும் அறவிடப்படலாகாது.
7. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொக்குவில் கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும். இறைச்சிக்காக மறி ஆடுகள், பசு மற்றும் கன்றுகள் அறுக்கப்படுவது அனுமதிக்கப்படமாட்டாது. இறைச்சிக்காக கொள்வனவு செய்யப்படும் கால்நடைகளுக்கு அப்பகுதி கால்நடை வைத்திய அதிகாரியின்நோய்த்தொற்று இல்லை என்ற சுகாதாரச் சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும். மேலும் சுகாதார வைத்தியஅதிகாரியினால் கால்நடைகளுக்கான நோய்த்தாக்கம் தொடர்பாக பிரகடனப்படுத்தப்படும்பொழுது கொல்கள செயற்பாடுகள் நிறுத்தப்படும். அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
8. இறைச்சிக் கடைகளுக்கான கேள்வியில் சித்திபெறும் கேள்விதாரர் சுகாதார வைத்திய அதிகாரியால் அறிவிக்கப்படும் சுகாதார மேம்பாட்டு விடயங்களைக் கருத்திற்கொள்ளத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தத்தினை இரத்துச் செய்வதற்கு சபைக்கு அதிகாரம் உண்டு.
9. அரசாங்கத்தினால் மாடு இறைச்சிக்காக வெட்டுவது தடை செய்யப்படும் பட்சத்தில் சபையினால் கேள்விதாரருடன் செய்யப்பட்ட குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்படும்.
10. திருநெல்வேலிச் சந்தையில் விசேட பண்டிகை நாட்களில் நடைபாதை மற்றும் வீதியோர வியாபார நடவடிக்கைகள் அனுமதிக்கப்படமாட்டாது என்பதுடன், சபையினால் ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வரி அறவிட அனுமதிக்கப்படும்.
11. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
12. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் சபை நிதிக்கு மாற்றப்பட்டு கேள்விகாரரின் பெயர் "தவறுநர்" பட்டியலில் சேர்க்கப்படும்.
13. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
14. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2024.11.25 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
15. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**2025 ஆம் ஆண்டுக்கு சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை**

| இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2025 ஏற்றுக்கொள்ள கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நீங்கலாக) | 1,000.00 | 400,000.00 | 36,053,380.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையம் | 1,000.00 | 20,000.00 | 1,223,750.00 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 15,000.00 | 804,100.00 |
| 4 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 1,000.00 | 10,000.00 | 114,583.34 |
| 5 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 1,000.00 | 10,000.00 | 176,000.00 |
| | **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| 1 | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 25,000.00 | 2,043,030.00 |
| 2 | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 15,000.00 | 1,276,000.00 |
| 3 | கொக்குவில் சந்தை கோழியிறைச்சிக் கடை | 1,000.00 | 15,000.00 | 1,068,100.00 |
| 4 | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 15,000.00 | 1,136,631.10 |
| 5 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 01 | 1,000.00 | 15,000.00 | 881,100.00 |
| 6 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 02 | 1,000.00 | 15,000.00 | 641,941.67 |
| 7 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 20,000.00 | 1,551,254.60 |
| 8 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 806,824.47 |

செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை , கொக்குவில்,
05.11.2024

# லிவிங்ஸ்டன் அதிரடி இங்கிலாந்து வெற்றி




கப்டன் லிவிங்ஸ்டன் சதம் விளாச, இங்கிலாந்து அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. வெஸ்ட் இண்டீஸ் சென்றுள்ள இங்கிலாந்து அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் வென்றது. இரண்டாவது போட்டி ஆன்டிகுவாவில் நடந்தது.

"டாஸ்" வென்ற இங்கிலாந்து அணி "பீல்டிங்" தேர்வு செய்தது. வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு கேசி கார்டி (71), கப்டன் ஷாய் ஹோப் (117), ஷெர்பேன் ரூதர்போர்டு (54) நம்பிக்கை அளித்தனர். 50 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 328 ரன் எடுத்தது.

சவாலான இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணிக்கு பில் சால்ட் (59), ஜேக்கப் பெத்தேல் (55) கைகொடுத்தனர். கப்டன் லியாம் லிவிங்ஸ்டன் சதம் கைகொடுக்க இங்கிலாந்து அணி 47.3 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 329 ரன் எடுத்து வெற்றி பெற்றது. லிவிங்ஸ்டன் (124) அவுட்டாகாமல் இருந்தார்.தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது. (6-8)

# தோல்விக்கு காரணம்
## கப்டன் ரோகித்-விளக்கம்



"ஒரு அணியாக இணைந்து சிறப்பாக விளையாடத் தவறியதால் டெஸ்ட் தொடரை இழந்துவிட்டோம்" என இந்திய கப்டன் ரோகித் சர்மா தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்துள்ள நியூசிலாந்து அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதலிரண்டு டெஸ்டில் வென்ற நியூசிலாந்து, 2-0 என ஏற்கனவே தொடரை கைப்பற்றியது. மும்பையில் நடந்த 3 ஆவது டெஸ்டில் இந்திய அணி 25 ரன் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. நியூசிலாந்து 3-0 என தொடரை முழுமையாக கைப்பற்றி கோப்பை வென்றது.இதுகுறித்து இந்திய கப்டன் ரோகித் சர்மா கூறுகையில், "ஒரு தொடரை இழப்பது, டெஸ்டில் தோல்வியடைவது எளிதல்ல. அதனை எளிதில் ஜீரணிக்க முடியாது. நாங்கள் சிறப்பாக விளையாடவில்லை என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இத்தொடரில் நியூசிலாந்து வீரர்கள், எங்களை விட மிகவும் நன்றாக விளையாடினர். ஒரு அணியாக இணைந்து விளையாடத் தவறியதால் தொடரை இழந்துவிட்டோம். இத் தோல்விக்கு நானே பொறுப்பேற்றுக் கொள்கிறேன்," என தெரிவித்தார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் உப அலுவலகத்தின் கீழ் இயங்கிவரும் பொது நூலகத்தினால் "உலகை வென்றவர்கள் வாசித்த மக்களே" என்ற தொனிப் பொருளின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய நூலக வாரத்தை முன்னிட்டு கையெழுத்துப் பிரதி மற்றும் புத்தகக்கண்காட்சியும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிதொடக்கம்மாலை 4 மணி வரை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ள பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெற்றுக் கொள்ளலாம் என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் புத்தூர் பொது நூலகர் அறிவித்துள்ளார். (நி-8)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி பிள்ளையார் தேவஸ்தானதின் சதுர்த்தி உற்சவம் இன்று மாலை 3.35 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜை போன்றவை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வரும் காட்சிஇடம்பெறும் என ஆலய பிரதமக் குருக்கள் சிவஸ்ரீ விவேகானந்த குருக்கள் அறிவித்துள்ளார். (நி-6-8)

# வரப்புயர மர நடுகை

## வேலைத்திட்டம் முகமாலையில்

(கிளிநொச்சி)

தமிழர்களின் புனித மாதமான நவம்பர் மாதத்தில் சூரிச் சிவன்கோயில் சைவத்தமிழ் சங்கத்தின் அன்பேசிவ இளம் தொண்டர் சபையின் நிதி அனுசரணையில் வரப்புயர மரநடுகையின் ஆரம்ப நிகழ்வு நேற்று முகமாலையில் உள்ள சிவபுர வளாகத்தில் நடைபெற்றது.

இதன் போது குறித்த வரப்புயர திட்டத்தின் கீழ் மரங்கள் வழங்கும் நிகழ்வு முகமாலை கிராம மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

யுத்த காலத்தில் அதிக மரங்கள் அழிவுற்றது. அதனால் மீண்டும் பயன் தரு மரங்களை நாட்டு வதன் மூலம் கிராம மக்கள் முன்னேற்றத்தை காண்பார்கள் என்ற நல்ல எண்ணத்துடன் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அன்பே சிவ தாயக இணைப்பாளர், நிர்வாகத்தினர், தொண்டர்கள், பணியாளர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள். (6-8)

## சடலத்தை பொறுப்பேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் 22.10.2024 அன்று அனுமதிக்கப்பட்ட தர்மலிங்கம் வசந்தராஜன் (வயது60) என்பவர் 27.10. 2024 அன்று இறந்து விட்டார்.

குருநாகல் வீதி புத்த எத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் எனவும் இவருடைய சடலத்தை யாரும் உரிமை கோராமல் இருப்பதனால் உடல் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.எனவே இவரின் உடலை அடையாளம் காட்டி 14 தினங்களுக்குள் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (நி-6-8)

# நல்லூரா எனும் தலத்தில் வீற்றிருக்கும் தம்பிரானே கந்தசஷ்டி நாள் வழிபாட்டில் யோக தரிசனம் காண்போம்

திரு நல்லூர் திருப்புகழ் -அருணகிரி நாதர்-772

மூல முண்டகனு பூதி மந்திரப
ராப ரஞ்சுடர்கள் மூனு மண்டலஅ
தார சந்திமுக மாறு மிந்த்ரதரு வுந்தளாமேல்

மூது ரம்பலவர் பீட மந்தமுமி
லாத பந்தவொளி யாயி ராங்கிரண
மூனு மிந்து வொளிர் சோதிவிண் படிகவிந்து...
நாதம்

ஓல மென்றுபல தால சந்தமிடு
சேவை கண்டமுதை வாரி யிலண்டுபகி
ரேழு கண்டுவிளையாடி யிந்துகதி...
ராங்கிசூமை

ஓடு மந்தகனி காலொ டுங்கநடு
தூணில் தங்கவறி ஞான வண்கயிறு
மீத ணைந்துசத கோடி சந்த்ரவொளி...
சந்தியாதோ

சூலி யந்தரிக பாலி சங்கரிபு
ராரி யம்பரிகு மாரி யென்குணசு
வாமி பங்கசிவ காம சுந்தரியு... கந்தசேயே

சூர சங்கரகு மார இந்திரச
காய அன்பருப கார சுந்தரகு
கானன னுஞ்சுருதி யோல மொன் நடன...
கொள்வேலா

சீல வெண்பொடியி டாத வெஞ்சமணர்
மாள வெங்கழுவி வேல் மென்றுபொடி
நீறி டுங்கமல பாணி சந்திரமுக...
கந்தவேளே

தேவ ரம்பையமு தீண மங்கைதரு
மான ணைந்தபுய தீர சங்கரதி
யாகர் வந்துறைந லூர மந்துவளர்...
தம்பிரானே

-திருப்புகழ்-772

சிவலோகத்தியாகர் என்னும் திருநாமம் உடைய சிவபிரான் உறைகின்ற திரு நல்லூரா எனும் தலத்தில் பொருந்தி வீற்றியிருக்கின்ற தம்பிரானே! சூரனை சங்கரித்த குமரவேளே! இந்திரனுக்கு உதவி செய்பவனே! அன்பே சிவம் எனும் அன்பர்களுக்கு உபகாரம் செய்பவனே! அழகனே! குகனே! எனவும் வேதங்கள் ஓலம் ஒன்ற முறையிட்டு உரைப்ப திரு நடனம் கொண்ட வேலனே! மூல முண்டகம் மூலாதாரக் கமலத்தில் உள்ள அனுபவ ஞானத்தைத் தரும் மந்திரம் ஆகிய மூனு மண்டல ஆதார சந்திரமுகம் ஆறும் ஓலம் என அபயமாக அழைத்தல் போன்ற ஒலியுடன் தேவா மருதகடலைப் பருகி வீணா தண்டம் எனப்படும் முதுகு எலும்பு வழியில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகம், விசுத்தி ஆக்ஞை எனப்படும் ஆறு ஆதார வழியே மேலே அணைந்து நூறு கோடி சந்திரர்களின் ஒளியை சிவப்பே ரொளியைச் சந்தியாதோ! பாக்கியம் கிட்டுமோ! நல்லூரா!

பரிசுத்தமான திருவெண்ணீற்றை அணியாதவர் களும், பொல்லாதவர்களுமான சமணர்கள் இறக்கும் படி கொடிய கழுவில் ஏறுங்கள் என திருவிளையாடல் இயற்றிய சிவசின்னமாகிய திருநீறு மதுரையில் கூன் பாண்டியன் முதலாக அனைத்து அடியார்களுக்கு திருநீறு அணிய வைத்த தாமரைக்கயனே! சந்திரன் போன்று முக விலாசத்தையுடையவனே! கந்த வேளே!

வள்ளியம்மை, தெய்வானையம்மை இணைந்த திருப்புயத்தையுடைவனே! தீரனே! சங்கரதியாகர்-சிவலோகத்தியாகர் என்னும் நாமம் உடையவனே சிவபிரான் வந்து உறைகின்ற திரு **நல்லூரா** எனும் தலத்தில் பொருந்தி வீற்றிருக்கின்ற எம்பெருமானே! அகர, உகர, மகர மூன்று விரல்களால் **திருநீறு பரவி அணிந்து அலங்காரா! அலங்காரா என் கந்தர் அலங்காரம்**, கந்தர் அனுபூதி, திருப்புகழ், கந்தர் அந்தாதி ஓதுவோம். நாவில் முருகன் வேல் இருந்து தொடர்ந்து பாடுவோம். அவன் அருள் பெறுவோம்.



க.கு.க சிவபாலன் K.K.K
ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயம் போசகர்

# இராசிபலன்

05.11.2024
ஐப்பசி 19, செவ்வாய்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 10.29 மணிவரை

கேட்டை முற்பகல் 9.00 மணிவரை
சுபநேரம் -10.34-12.04 மணிவரை
இராகுகாலம் -3.04-4.34 மணிவரை
சதுர்த்தி விரதம், சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்: கார்த்திகை

வளவன்




வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், திடீர்ப் பயணங்கள் இடம்பெறலாம்.




பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர்களின் சந்திப்பால் உற்சாகம் கூடும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், செய் தொழில் மேன்மையுண்டு




உடன் பிறப்புக்களின் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும்,




வீட்டுத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் கூடும், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.




குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல்நலன் பற்றிய கவலைகள் உருவாகி மறையும், வேலைச் சுமை கூடும், பிரயாண பயமுண்டு.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வார், பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பிள்ளைகள் வழியில் பெருமைகள் வந்து சேரலாம்.




தொழில் வளர்ச்சியுண்டு, நண்பர்களின் ஒத்துழைப்பால் நலன் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.




எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.




விருந்தினர்கள் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆசைப்பட்ட பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு,சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் உண்டு.




கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், கடன் சுமை குறையும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.




சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணங்களால் சுணக்கம் ஏற்படலாம், சவாலை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள்.




மற்றவர்களின் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்

நலமாக இருக்கும்போது நோய்பற்றி தெரிந்து கொள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 623





தங்கள் பிரார்த்தனையைப் பிறைசூடும் பெருமானிடம் செலுத்திக் கொள்ளுங்கள் அல்லது தங்கள் இஷ்ட தெய்வமான விஷ்ணு மூர்த்தியிடம் பிரார்த்தனை செய்யுங்கள்.

ஆம் தாயே! தாங்கள் பெரிய மனது செய்யாமற் போனால் அம்பலத்தானும் அரங்கத்தானும்தான் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும்.

"அப்படி என்ன ஆபத்து இந்த நாட்டுக்கு வந்துவிட்டது? மதுராந்தகன் சிங்காதனம் ஏறுவதால் அதை எப்படித் தடுக்க முடியும்?"

கேளுங்கள், பெருமாட்டி! இன்றைக்கு இந்நகர மாந்தர் கொதித்தெழுந்தது போல காஞ்சிபுரத்திலிருந்து இராமேஸ்வரம் வரை உள்ள மக்கள் இன்னும் இரண்டு மூன்று நாளைக்குள் ஆத்திரமடைந்து கொதித்தெழுவார்கள். அத்துடன் முடிந்து விடாது இலங்கையிலிருந்து பூதிவிக்கிரமகேசரி ஏற்கனவே படை திரட்டிக்கொண்டு புறப்பட்டு விட்டார் என்று அறிகிறேன். ஆதித்த கரிகாலனுக்குச் செய்தி எட்டும்போது அவனும் பொறுக்கமாட்டான். வடதிசைச் சைன்யத்துடன் தஞ்சையை நோக்கிக் கிளம்புவான். பழுவேட்டரையர்களும் மற்ற சிற்றரசர்களும் ஏற்கெனவே படை திரட்டிக் கொண்டிருக்கிறார்கள். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் நடந்த யுத்தத்தைப் போன்ற பயங்கரமான தாயாதிச் சண்டை இந்த நாட்டில் நடைபெறும். தங்களுடைய உற்றார், உறவினர் எல்லாரும் அழிந்து விடுவார்கள். இதையெல்லாம் தாங்கள் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறீர்களா?"

"ஐயா! மதிநுட்பம் மிகுந்த முதல் மந்திரியே! எனக்கு உற்றார் உறவினர் என்று யாரும் இல்லை. மேற்கே மலை நாட்டில் அவதரித்த சங்கரர் என்ற மகாபுருஷனைப் பற்றித் தாங்கள் கேள்விப்பட்டிருப்பீர். அந்த மகான்

'மாதாச பார்வதி தேவி
பிதா தேவோ மகேச்வர
பாந்தவா: சிவபக்தாஸ்ச'

என்று அருளியிருக்கிறார். என்னுடைய அன்னை பார்வதி தேவி. என்தந்தை பரம சிவன் என் உற்றார் உறவினர் சிவ பக்தர்கள், இந்த உலகில் வேறு பந்துக்கள் எனக்கு இல்லை"

"அம்மணி! அதே சுலோகத்தில் சங்கரர் அருளியுள்ள நாலாவது வாக்கியத்தைத் தங்களுக்கு நினைவூட்டுகிறேன்.

'ஸ்வதேசோ புவனத்ரய'

என்றும் அவர்தான் சொல்லியிருக்கிறார். நாம் பிறந்த தேசந்தான் நமக்கு மூன்று உலகமும் தங்களுடைய சொந்த நாடு உள்நாட்டுச் சண்டையினால் அழிந்து போவதைத் தாங்கள் பார்த்துக் கொண்டிருப்பீர்களா?"

என்னுடைய சொந்த தேசம் எனக்கு மூன்று உலகத்தையும் விட அருமையானது தான். ஆனால் இந்தச் சாண் அகலத்துச் சோழநாடுதான் நம்முடைய சொந்த நாடா? ஒரு நாளுமில்லை. வடக்கே கைலையங்கிரி வரையில் உள்ள நாடு என்னுடைய நாடு.

சோழ நாட்டில் இடமில்லாவிட்டால் நான் காசிக் ஷேத்திரத்துக்குப் போவேன் காஷ்மீரத்துக்கும் கைலாசத்துக்கும் போவேன். அப்படி யாத்திரை கிளம்பும் யோசனை எனக்கு வெகு நாளாக உண்டு. அதற்கு உதவி செய்யுங்கள்."


"தாயே! தெற்கே திரிகோண மலையிலிருந்து வடக்கே இமோத்கிரி வரையில் உள்ள தேசம் நமது ஸ்வதேசம் என்று ஒத்துக் கொள்கிறேன். இப்படிப் பரந்துள்ள பாரத புண்ணிய பூமிக்குத் தற்போது பேரபாயம் நேர்ந்திருக்கிறது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நாயின் தந்திரம்



ஓய்வுக்காக காட்டுக்குச் சென்றபோது தனது செல்ல நாயையும் அழைத்துப் போனார் ஒரு அரசர். அவர் வேட்டையில் மும்முரமாக இருக்க அங்குமிங்குமாக பாய்ந்து பாய்ந்து காட்டின் வண்ணத்துப் பூச்சிகளைத் துரத்திக் கொண்டிருந்தது நாய்.

பல நிமிடங்களுக்குப் பின்புதான் தான் வழியைத் தவறவிட்டுவிட்டதை உணர்ந்தது.

அப்போது சற்று தூரத்தில் புலி ஒன்று வருவதைக் கண்டது நாய். அது தன்னை வேட்டையாடத்தான் வருகிறது என்பதையும் உணர்ந்தது. தப்பிப்பது எப்படி என்று எண்ணிய போது எதிரில் சில எலும்புத் துண்டுகளைக் கண்டது. சட்டென ஒரு காரியம் செய்தது அந்த நாய். புலிக்கு முதுகு காட்டியவண்ணம் எலும்புத் துண்டுகளின் முன் அமர்ந்தது. புலி அருகில் வந்தவுடன் ஆஹா... புலியின் மாமிசம் எவ்வளவு சுவை! இன்னும் ஒரு புலி கிடைத்தால் நன்றாக இருக்குமே என்றது நாக்கைச் சுழற்றியபடியே. அதனைக் கேட்ட புலிக்குப் பயம் வந்ததும், நல்ல வேளை இந்த மிருகத்திடமிருந்து தப்பினோம் என்று எண்ணி மெதுவாகப் பதுங்கிப் பின்வாங்கியது.

இந்த சம்பவத்தை மரத்தின் மேலமர்ந்து கவனித்துக் கொண்டிருந்த குரங்கு ஒன்று நாயைக் காட்டிக் கொடுப்பதன் மூலம் புலியிடமிருந்து தனக்குப் பாதுகாப்பு தேடிக் கொள்ளலாம் என எண்ணி புலி சென்ற திசையை நோக்கி விரைந்தது. அதனைப் பார்த்த நாய் ஏதோ விவகாரம் எனப் புரிந்து கொண்டதோடு இனி புலியிடமிருந்து ஓடித் தப்ப முடியாது என்பதையும் உணர்ந்து கொண்டது.

குரங்கு புலியிடம் நாயின் தந்திரத்தைக் கூறியதும் கோபம் கொண்ட புலி, என்னுடன் வந்து அந்த நாய் என்ன பாடு படுகிறது என்பதைப் பார் என்று உறுமிவிட்டு குரங்கினைத் தன் முதுகில் ஏற்றிக் கொண்டு நாய் இருந்த இடம் நோக்கி விரைந்தது.

குரங்கும் புலியும் சேர்ந்து வருவதைக் கண்ட நாய், பழைய இடத்தில் அமர்ந்தபடியே அவற்றைப் பார்க்காதது போல பாசாங்கு செய்து இன்னொரு புலியைக் கொண்டு வருவதாகச் சொன்ன குரங்கை இன்னும் காணோமே! என்றது சத்தமாக.

பின் என்ன நடந்திருக்கும் என்று சொல்லத் தேவை இல்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குள் இருக்கும் பண்புகள்தான் வெளியுலகில் எனக்குக் கிடைக்கும் மரியாதைக்கு ஆதாரம்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்

ஒருவரின் இயல்பை அறியவேண்டுமாயின், அவருக்கு ஒன்றில் பதவியைக் கொடுத்துப் பார்க்க வேண்டும். அல்லது பணத்தைக் கொடுத்துப் பார்க்க வேண்டும்.

அப்போதுதான் குறித்த நபர் எப்பேற்பட்டவர் என்பதை அறிய முடியும்.

ஆம் பணம், பதவி என எத்தகைய வசதி வாய்ப்புகள் கிடைத்தாலும் தன்னிலை மாறாமல் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று யார் செயற்படுகின்றார்களோ அவர்களே உன்னதமான மனிதர்கள் – உன்னதமான தலைவர்கள்.

திருநாவுக்கரசு நாயனார் உழவாரத் தொண்டாற்றியவர். அவர் ஆலயச் சுற்றுச் சூழலை உழவாரத்தால் செருக்கித் தூய்மைப் படுத்தும்போது அங்கே பொன்னும் செங்கட்டிகளும் வருகின்றன.

ஆனால் நாவுக்கரசர் பொன் என்று அங்கலாய்க்கவோ அன்றி செங்கட்டிகள் என்று வெறுக்கவோ இல்லை.

இரண்டையும் ஒன்றாக நோக்கினார். அதனால் உழவாரப் பணியை சரியைத் தொண்டாக ஆற்றி, சாலோக முத்தியை அடைந்தார் என்கிறது புராணம்.

இதற்குள் இருக்கக்கூடிய தத்துவத்தை நாம் நுணுகி ஆராய வேண்டும். அதாவது தொண்டு செய்வதெனத் தீர்மானித்து விட்டால், அங்கு பேதமைக்கும் தடுமாற்றத்துக்கும் ஏமாற்று வித்தைகளுக்கும் போலித்தனங்களுக்கும் பொய்மைக்கும் புரட்டுக்கும் இடமிருக்க முடியாது.

உழவாரத் தொண்டாற்றிய நம் நாவுக்கரசர்; ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கிய பெருந்தகை.

ஆக, மக்கள் பணி செய்வதற்குத் துணிந்து விட்டால், உள்ளத் துறவு மிகவும் அவசியமாகிறது.

ஆம், இலங்கைத் திருநாடு இந்தளவு தூரம் கந்தறுந்து போவதற்கு மூலகாரணம் அரசியலையும் ஆட்சி அதிகாரத்தையும் தத்தம் சுயலாபத்துக்குப் பயன்படுத்தியது தான்.

உண்மை. இந்த உலகில் மிகச்சிறந்த ஆட்சியை மக்களுக்கு வழங்கிய தலைவர்களை எடுத்து நோக்கினால், அவர்கள் பொதுச் சொத்துக்களை பொதுமக்களின் சொத்தாகக் கருதினர். நாட்டின் சொத்துக்கள் மீது ஆசை கொள்வதும் அவற்றை வாரிச்சுருட்டுவதும் தேசத்துரோகம் என நினைத்தனர்.

அதன் காரணமாக பொதுச் சொத்தில் வெள்ளிச் சதமேனும் தீண்டாமல் மக்கள் பணியை ஆற்றி அதன்மூலம் போரானந்தப் பட்டனர். இத்தகையவர்களே உன்னதமான தலைவர்கள். உயர்ந்த சிந்தனையாளர்கள்.

எனினும் எங்கள் நாட்டில் இத்தகைய தலைவர்களுக்கு ஏற்பட்ட வறுமை காரணமாக நாடு பஞ்சத்தில் வீழ்ந்தது.

இதனையே கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர் நுவரெலியாவில் உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க; முன்னைய ஆட்சியாளர்கள் இந்த நாட்டை நாசமாக்கிவிட்டனர் எனப் பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

நாம் கூறியது அங்கு மட்டுமல்ல இங்கும் தான்.

# வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்டெடுக்கும் யுகம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது

## ஜனாதிபதி அநுர குமார

வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்டெடுக்கும் யுகம் ஆரம்பமாகியுள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பதுளைப் பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட அவர், இந்தப் பயணத்தை யாராலும் தவிர்க்க முடியாது.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எங்கள் நாட்டை டிஜிட்டல் மயமாக்குவதற்கான திட்டத்தை நாங்கள் தயாரித்துள்ளோம்.

இலங்கைக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வந்த ஆண்டாக 2025 ஆம் ஆண்டை உருவாக்குகிறோம்.

எங்கள் தூய்மையான இலங்கைத் திட்டத்தை நாங்கள் தொடங்குகிறோம்.

நல்லொழுக்கத்தில் தூய்மையான, இணக்கமான நாடு. சட்டம், குறைந்தபட்சம், நாடு முழுவதும் சுத்தமான கழிப்பறை அமைப்பு இல்லாத நாடு இது.

இலங்கையை தூய்மையான கழிவறை அமைப்புடன், நல்ல பழக்க வழக்கங்களுடன், நாங்கள் தூய்மையான நாடாக மாற்றுகிறோம்.

புதிய அறிவியல் மற்றும் ஆராய்ச்சி மையத்தைத் திறக்க வேண்டும். மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீண்டும் திறக்கவும், புதிய தொழிற்சாலைகளை உருவாக்கவும் நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

தமது அரசாங்கம் எதிர்கொண்ட முதலாவது சவாலானது பொருளாதாரத்தை ஒழுங்கான முறையில் முகாமைத்துவப் படுத்துவதே என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும், நாட்டை சாதாரண நிலையில் வைத்திருப்பதே எங்களுக்கு இருந்த முக்கிய நெருக்கடி. ஆழமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள ஒரு நாட்டை நாங்கள் கைப்பற்றியுள்ளோம்.

உடனடிப் பொருளாதார மாற்றங்களை இந்த நாட்டினால் தாங்க முடியாது. எனவே அது எங்கள் திட்டமும் அல்ல.

டாலரை 300 ரூபாவுக்குக் கீழே வைத்திருக்க நாங்கள் திட்டமிட்டோம் அதனூடாக பொருளாதாரம் வீழ்ச்சியடையாமல் பாதுகாத்தோம் என்றார். (ம-7)

# யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

பொலநறுவை, செவனபிட்டிய பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளதாக மனம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

பொலநறுவை, செவனபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதுடைய மூதாட்டியே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த மூதாட்டி தனது வீட்டிற்கு அருகில் சிறிய கடை ஒன்றை நடத்தி வந்துள்ள நிலையில் சம்பவத்தன்று தனது கடையில் உறங்கிக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது கடையை உடைத்துக் கொண்டு உள் நுழைந்த காட்டு யானை ஒன்று இந்த மூதாட்டியை பலமாகத் தாக்கியுள்ளது.

காயமடைந்த மூதாட்டி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# பொலிஸ் அதிகாரி மீது வாள்வெட்டுத் தாக்குதல்

(கொழும்பு)

பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு கிடைத்த முறைப்பாடு ஒன்று தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவரை வாளால் வெட்டி காயப்படுத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாணந்துறை தெற்குப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை எலுவில பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை தெற்கு பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் பணிபுரியும் பொலிஸ் அதிகாரி ஒருவரே காயமடைந்துள்ளார்.

காயமடைந்த பொலிஸ் அதிகாரி பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் வாளும் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை தெற்குப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# ஆனைக்கோட்டையில் வீட்டின் மீது தாக்குதல்

யாழ்.ஆனைக்கோட்டையில் உள்ள வீடொன்று இனந்தெரியாதவர்களால் அடித்து நொருக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரவு 11 மணியளவில் வீட்டார் நித்திரையில் இருக்கும் போது மோட்டார் சைக்கிளில் வாள்களுடன் வந்த 4 பேர் வீட்டின் யன்னல் கண்ணாடிகளை உடைத்தும் மோட்டார் சைக்கிளையும் சேதப்படுத்தி விட்டு சென்றுள்ளனர். (ம-7)

# இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணய விபரங்களுக்கு அமைவாக, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் மற்றும் விற்பனைப் பெறுமதியானது நேற்று முறையே 288.55 ரூபாவாகவும், 297.60 ரூபாவாகவும் உள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (01) அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனைப் பெறுமதியானது முறையே 288.59 ரூபாவாகவும், 297.64 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

மத்திய கிழக்கு நாடுகளின் நாணயங்களுக்கு நிகராகவும் ரூபாவின் பெறுமதி நேற்று அதிகரித்துள்ளது.

அதேநேரம், ஏனைய பல வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகராக ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி கண்டுள்ளது. (ம-7)

# உழவு இயந்திரம் கவிழ்ந்து விபத்து

## 14வயது சிறுவன் பலி

(அநுராதபுரம்)

அநுராதபுரம், கல்கிரியாகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கரவிலகல சந்தியில் இடம்பெற்ற விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக கல்கிரியாகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை (03) இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் ஒன்று வீதியை விட்டு விலகிக் கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விறகுகளை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரம் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின் போது உழவு இயந்திரத்தில் பயணித்த சிறுவன் ஒருவன் படுகாயமடைந்துள்ள நிலையில் கலாவெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம், நேகம பஹாப் பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயதுடைய சிறுவனே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, உழவு இயந்திரத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை 01 - 30, 2024**

**"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்ட வேண்டும்"**

அலெக்சாண்டர் சிமித்
(ஸ்கொட்லாந்துக் கவிஞர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல் - 2024

02

## வட மாகாண வாக்காளர்கள் தெரிந்திருக்க வேண்டியவை

இதனை விளங்கிக் கொள்வதற்காக யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட மாதிரி வாக்குச் சீட்டை (படம் A) மீண்டும் பாருங்கள்.

படம்-1

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|

அவ் வாக்குச் சீட்டின் அடிப்பகுதியில் படம் 1இல் காட்டப்பட்டது போன்ற பெட்டியைக் கவனியுங்கள். அங்குதான் நீங்கள் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும்.

படம்-2

| 1 | 2 | X | 4 | X | X | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|

நீங்கள் உதாரணமாக 3ஆம், 5ஆம் மற்றும் 6ஆம் இலக்க வேட்பாளர்களுக்கு வாக்களிக்க விரும்பினால் படம்- 2இல் காட்டியது போல வாக்களித்து விடுங்கள். நீங்கள் ஒரு வேட்பாளருக்கு மட்டும் வாக்களிக்க விரும்பினால் அவ்விலக்கத்திற்கு மட்டும் புள்ளடியிடவும். இரண்டு வேட்பாளர்களுக்கு மட்டும் வாக்களிக்க விரும்பினால் அவ்விலக்கங்களுக்கு மட்டும் புள்ளடியிடவும். ஆனால் மூன்று பேருக்கு மேல் வாக்களிக்க முடியாது.


அவ்வாறு நீங்கள் மூன்று பேருக்கு மேல் வாக்களித்தால் உங்களது வாக்கு, வேட்பாளர்களுக்கான வாக்குக் கணக்கில் எடுபடாது. செல்லுப்படி இல்லாததாக போய்விடும். ஆனால் நீங்கள் கட்சிக்கு/சுயேட்சை குழுவுக்கு சரியாக வாக்களித்திருப்பதால் உங்கள் வாக்கு, கட்சிக்கான/சுயேட்சை குழுவுக்கான வாக்காக எடுக்கப்படும். அங்கு அது செல்லுப்படியான வாக்காகக் கருதப்படும். அதன்பின் நீங்கள் புள்ளடியிட்ட வாக்குச் சீட்டை தலைமை தாங்கும் அலுவலர் முன்னால் வைக்கப்பட்டிருக்கும் வாக்குப் பெட்டியில் போடவேண்டியதுதான்.

### வாக்களிப்பில் இரண்டு படிகள் உண்டு

பொதுவாக கூறுவதாயின் வாக்களிப்பில் இரண்டு படிகள் உண்டு. முதலாவது நீங்கள் விரும்பும் கட்சிக்கு/சுயேட்சை குழுவுக்கு வாக்களித்தல். இரண்டாவது படி கட்சிக்கு/சுயேட்சை குழுவுக்கு வாக்களித்த பிறகு, அக்கட்சியில்/ சுயேட்சைக் குழுவில் போட்டியிடும் வேட்பாளர்கள் மூவருக்கு வாக்களித்தல் என்பனவாகும். யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகளினதும் சுயேட்சைக் குழுக்களினதும் சின்னங்கள் பற்றி......


முன்னர் கூறியது போல யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலிருந்து 23 அரசியற்கட்சிகளும் 21 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. அதாவது மொத்தமாக 44 குழுக்கள் போட்டியிடுகின்றன. எனவே 44 குழுக்களுக்கும் 44 சின்னங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதில் 23 அரசியற் கட்சிகளுக்கான சின்னங்கள் எவை என்பதை படம் -3 காட்டுகிறது.

பாராளுமன்றத் தேர்தல் -2024
அரசியல் கட்சிகளுக்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள் சின்னங்கள்
யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் படம் 3




21 சுயேட்சைக் குழுக்களுக்கான சின்னங்கள் எவை என்பதை படம் -4 காட்டுகிறது.

பாராளுமன்றத் தேர்தல் -2024
சுயேச்சைக் குழுக்களுக்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள் சின்னங்கள்
யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம் படம் 4




போட்டியிடும் கட்சிகளின் பெயர்கள், சுயேட்சை குழுக்களின் இலக்கங்கள் மற்றும் அவற்றின் சின்னங்களை அட்டவணை -1 காட்டுகிறது.

பாராளுமன்றத் தேர்தல் -2024 அட்டவணை -1
போட்டியிடும் கட்சிகளின் பெயர்கள், சுயேச்சை குழுக்களின் இலக்கங்கள் மற்றும் அவற்றின் சின்னங்கள் - யாழ்ப்பாணம் மாவட்டம்

| போட்டியிடும் குழு | சின்னம் | போட்டியிடும் குழு | சின்னம் |
|---|---|---|---|
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | துவிச்சக்கர வண்டி | சர்வஜன அதிகாரம் | பதக்கம் |
| அகில இலங்கை தமிழர் மகாசபை | கப்பல் | சுயேச்சை குழு 1 | தையல் இயந்திரம் |
| எங்கள் மக்கள் சக்தி கட்சி | கொடி | சுயேச்சை குழு 2 | ஊஞ்சல் |
| புதிய சுதந்திர முன்னணி | உண்டியல் | சுயேச்சை குழு 3 | மேசை மின்விசிறி |
| அருணலு மக்கள் முன்னணி | நீர்க்குழாய் | சுயேச்சை குழு 4 | சாவிக்கொத்து |
| இலங்கைத் தமிழரசுக் கட்சி | வீடு | சுயேச்சை குழு 5 | சிசிரிவி கமரா |
| ஈரோஸ் ஜனநாயக முன்னணி | மெகாஃபோன் | சுயேச்சை குழு 6 | தாயக்கட்டை |
| ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி | வீணை | சுயேச்சை குழு 7 | தட்டச்சுப்பொறி |
| ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி | மூக்குக்கண்ணாடி | சுயேச்சை குழு 8 | அணில் |
| ஐக்கிய தேசிய கட்சி | யானை | சுயேச்சை குழு 9 | குருவிச் சிறகு |
| மக்கள் போராட்ட முன்னணி | குடை | சுயேச்சை குழு 10 | ரயர் |
| ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி | சங்கு | சுயேச்சை குழு 11 | வண்டில் |
| ஜனசெத பெரமுன | உழவு இயந்திரம் | சுயேச்சை குழு 12 | ஆமை |
| தேசிய மக்கள் சக்தி | திசைகாட்டி | சுயேச்சை குழு 13 | கரும்பலகை |
| தமிழ் மக்கள் கூட்டணி | மான் | சுயேச்சை குழு 14 | மாங்காய் |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | சூரியன் | சுயேச்சை குழு 15 | ஆந்தை |
| ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி | கழுகு | சுயேச்சை குழு 16 | நெற்கொட்டகை |
| ஜனநாயக தேசிய கூட்டணி | தபால் பெட்டி | சுயேச்சை குழு 17 | மருந்தேற்றல் குழல் |
| ஜனநாயக இடதுசாரி முன்னணி | மணிக்கூடு | சுயேச்சை குழு 18 | பசு |
| சிறீலங்கா பொதுஜன பெரமுன | மலர் மொட்டு | சுயேச்சை குழு 19 | கால்பந்து |
| ஐக்கிய மக்கள் சக்தி | தொலைபேசி | சுயேச்சை குழு 20 | தொலைக் காட்சிப்பெட்டி |
| சோசலிச சமத்துவக் கட்சி | கத்தரிக்கோல் | சுயேச்சை குழு 21 | லாந்தர் |

அடுத்து நாம் வன்னித் தேர்தல் மாவட்டத்தைப் பார்ப்போம். முன்னர் கூறியது போல் வன்னி தேர்தல் மாவட்டம் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியது.

இவ் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலுக்கு வன்னி தேர்தல் மாவட்டத்திலிருந்து 23 அரசியற் கட்சிகளும் 25 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. அதாவது மொத்தமாக 48 குழுக்கள் போட்டியிடுகின்றன. எனவே 48 குழுக்களுக்கும் 48 சின்னங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலும் ஒன்பது வேட்பாளர்கள் உள்ளடங்கியிருப்பதால் மொத்தமாக 432 (=48x9) வேட்பாளர்கள் ஆறு ஆசனங்களுக்காகப் போட்டியிடுகின்றனர்.

### வன்னி தேர்தல் மாவட்ட வாக்குச் சீட்டு மாதிரி பற்றிய ஒரு விளக்கம்


நீங்கள் வாக்குச் சீட்டு மாதிரிப் படத்தை பார்க்கும் போது பின்வருவனவற்றைக் காணலாம். முதலாவதாக அரசியற்கட்சியின் பெயர் / சுயேட்சைக் குழுவின் இலக்கம் இருக்கும் அதனைத் தொடர்ந்து அதே கூட்டுக்குள் அக்கட்சியின் / அச் சுயேட்சைக் குழுவின் சின்னம் இருக்கும். அதனைத் தொடர்ந்து படத்தில் காட்டியது போன்று சிறிய வெற்றுக் கூடு உள்ளது.

வன்னித் தேர்தல் மாவட்டத்திலிருந்து 23 அரசியற் கட்சிகளும் 25 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. எல்லாமாக 48 குழுக்கள் போட்டியிடுகின்றன. 48 குழுக்கள் போட்டியிடுவதால் வாக்குச் சீட்டின் நீளத்தைக் குறைப்பதற்காக அதன் அகலம் கூட்டப்பட்டு வாக்குச் சீட்டில் இரண்டு நிரல்களில் அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வதை பக்கம் 24 குழுக்களின் பெயர், சின்னம் மற்றும் வாக்களிக்கும் கூடும் இடது பக்கம் 24 குழுக்களின் பெயர், சின்னம் மற்றும் வாக்களிக்கும் கூடும் உள்ளன. இதை நீங்கள் மாதிரி வாக்குச் சீட்டினைப் பார்க்கும் போது (படம் B தரப்பட்டுள்ளது) விளங்கிக் கொள்வீர்கள். உங்கள் புள்ளடி அவ் வெற்றுக் கூட்டுக்குள் தான் இடவேண்டும்.

அதாவது நீங்கள் கட்சியின் பெயரையும் / சுயேட்சைக் குழுவின் இலக்கத்தையும் அவற்றின் சின்னத்தையும் அல்லது சரியான சின்னத்தை மட்டும் பார்த்து அதற்கு நேராக அருகில் உள்ள வெற்றுக் கூட்டுக்குள் புள்ளடியிட வேண்டும்.

படம் B வன்னி தேர்தல் மாவட்ட மாதிரி வாக்குச் சீட்டு




(தொடரும்...)

கலாநிதி க. தவலிங்கம், ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் திகதிக்கு...

தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுக்காமல் நிராகரிப்பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நீண்ட விசாரணைகளின் பின்னர் நீதியரசர்களான ப்ரீதிபத்மன் சூரசேன, சிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த உத்தரவை நேற்று பிறப்பித்தது.

பொதுத் தேர்தல் திகதி சட்டத்துக்கு உட்பட்டதில்லை என்று உத்தரவிடக் கோரி சமூக செயற்பாட்டாளரும் நாம் ஸ்ரீ லங்கா தேசிய அமைப்பின் இணைப்பாளருமான எச்.எம்.பிரியந்த ஹேரத் இந்த அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

பொதுத் தேர்தலுக்கான ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தல் சட்ட விரோதமானது என்று அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனுதாரரின் கூற்றுப்படி, தேர்தல் விதிகளின்படி வேட்புமனு ஏற்பு நிறைவடைந்த நாளிலிருந்து ஐந்து வாரங்களுக்குக் குறையாத அல்லது ஏழு வாரங்களை விட அதிகரிக்காத காலப் பகுதியில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

அதன்படி ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டு இறுதி செய்யப்பட்டதிலிருந்து பார்க்கும் போது நவம்பர் மாதம் 15ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 29ஆம் திகதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி இதனை மீறி, 14ஆம் திகதியே தேர்தலை நடத்துவதாக அறிவித்திருப்பது அரசியல் யாப்புக்கு முரணானது என்று அவர் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்தத் திகதி சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், தேர்தல் பணிகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளது என்றும் சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான மேலதிக மன்றாடியார் நாயகம் மன்றுரைத்தார்.

இதன் அடிப்படையில் குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் நிராகரிப்பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. (ம-7)

## இராணுவ...

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டின் போது, வடக்கிலுள்ள முகாம்களை அகற்றுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதா? எனக் கேள்வி எழுப்பப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

முகாம்களை அகற்றுவதாயின் அதற்கென வழிமுறையொன்று காணப்படுகிறது. அதற்கமைய முதலில் அச்சுறுத்தல் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு அச்சுறுத்தல் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதன் பின்னரே இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். இதன்போது அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும்.

இவ்வாறு உயர் பாதுகாப்பு வலயத்தின் கீழ் காணப்பட்ட யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் வசாவிளான் மத்திய கல்லூரியிலிருந்து அச்சுவேலி - தோலகட்டி சந்தி வரையிலான வீதி சுமார் மூன்று தசாப்தங்களின் பின்னர் மக்கள் போக்குவரத்துக்காக கடந்த முதலாம் திகதி முதல் திறக்கப்பட்டது. பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்த மதிப்பீட்டின் பின்னரே அந்த வீதியைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதியிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த வகையிலேயே முகாம்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளும் முறையான வழிமுறையைப் பின்பற்றி எடுக்கப்படும். பாதுகாப்புத் தொடர்பான விடயங்களில் மிகுந்த கரிசனையுடன் முப்படையும் பொலிஸாரும் செயற்பட்டு வருகின்றனர் என்றார். (ம-7)

## ஜனாதிபதி...

பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

தேர்தல் பிரசாரம் ஒன்றுக்காவே ஜனாதிபதி அநுர யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## வடக்கில்...

மர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 21 ஆம் திகதி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அவர்கள் பதவி ஏற்றதன் பின்னர் பல வருட காலமாக மூடப்பட்டிருந்த ஜனாதிபதி மாளிகையின் சுற்றுவட்ட வீதியை மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளதுடன் பலாலி வயாவிளான் வீதியும் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இன்னும் பல வீதிகள் மக்கள் பயன்பாட்டுக்காக கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அது மட்டுமின்றி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது.

சில முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து தாமும் அரசாங்கத்துடன் இணைந்து பயணிக்கவுள்ளதாகவும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைமுன்னெடுக்க வேண்டியுள்ளதாகவும் கூறியுள்ளனர். ஆனால் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் 25 அமைச்சுப் பதவிகளையும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களே வகிப்பார்கள் எனவும் இதைவிட வேறு எவரும் எமது அரசாங்கத்தில் இணைத்துக் கொள்ளவோ அவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்குவதற்கோ தயாராக இல்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமின்றி வட மாகாணத்திலும் சரி இலங்கையின் எப்பாகத்திலும் போதைப்பொருள் உற்பத்தி செய்யப்படுவதில்லை வெளிநாடுகளில் இருந்தே இதனைக் கொண்டு வந்து எமது பகுதியில் உள்ள இளைஞர்கள் மற்றும் சிறுவர்களின் எதிர்காலத்தை அழித்து வருகின்றனர். எமது அரசாங்கத்தில் இவற்றுக்கெல்லாம் ஓர் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ம-7,316)

## கேப்பாப்பிலவு...

நேற்றுப் புதுக்குடியிருப்பில்இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் கேப்பாப்பிலவு மக்கள் பிரதமர் ஹரிணி அமரசூரியவைச் சந்தித்து மகஜர் ஒன்றினைக் கையளித்துள்ளனர்.

முல்லைத் தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் தேசிய மக்கள் சக்தியின் முக்கிய நிகழ்வாக, "நாட்டைக் கட்டியெழுப்பும், நாம் ஒன்றாக திசைகாட்டிக்கு" எனும் கருப்பொருளில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டம்புதுக்குடியிருப்பு தனியார் பேருந்து நிலைய வளாகத்தினுள் இடம்பெற்ற நிலையில் அக்கூட்டத்தில் சிறப்பு அதிதியாக பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்து கொண்ட நிலையில் கேப்பாபிலவு காணி விடுவிப்பு சார்பான குழுவினால் நேற்று தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது. (ம-7,299)


மஹஜன சம்பத
திகதி 2024.11.04
சீட்டிழுப்பு இலக்கம் 5646
A 9 5 3 2 0 4
அத சம்பத A 3 2 0 4
சீட்டிழுப்பு இலக்கம் 221
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.11.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1676
Q 19 50 65 73 Q
Double Chance 17368

மெகா பவர்
திகதி 04/11/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1994
F 11 12 13 61 69
004973

லக்கி 7 VIP
திகதி 2024.11.04
சீட்டிழுப்பு இலக்கம் 0472
O 5 5 9 7 7 6 O

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3888
சீட்டிழுப்பு திகதி 04.11.2024
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 16 26 72 76
A 170088
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.11.04
சீட்டிழுப்பு இலக்கம் 955
தனுசு 06 43 44 46 தனுசு
110384 33

உத்தியோகபூர்வ முடிவுகள்
04.11.2024 வெற்றி வாரம் 354
ஆங்கில எழுத்து S
மற்றும் வெற்றி இலக்கம் 0 8 5 0 7 4
21056
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,991,144.00
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2620
சீட்டிழுப்பு திகதி 2024.11.04 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 17 29 58 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,804,691.20
DLB

சனிதா
திகதி 04.11.2024 வெற்றி வாரம் 4781
05 29 45 74 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,238,854.00
ரூ.100,000/- 74133
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4332
சீட்டிழுப்பு திகதி 04.11.2024 தினம் திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 17 20 35 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,392,091.20
175857
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 21 01 38 50 54
சுப்பர் இலக்கம்
1796
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.554,354,919.00
04.11.2024 திங்கட்கிழமை
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2024.11.04 வெற்றி வாரம் 2074
வெற்றி இலக்கங்கள் 26 42 47 62 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,133,707.20
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2446
சீட்டிழுப்பு திகதி : 2024.11.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.79,760,508.00
22 29 34 64 Y
298477
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத் தேர்தல் - 2024


(யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்
(தமிழ் தேசிய மக்கள் முன்னணி)





3





8



2 கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

இரு தேசம் ஒரு நாடு இலக்கினை அடைய
ஒற்றைத் தலைமையில் ஓரணியாவோம்!

தாயகம் - தேசியம் - சுயநிர்ணம்

9 செல்வராசா கஜேந்திரன்

(C-102)


## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்...

அமரர் **இராமலிங்கம் நிதர்ஷன்**



மறைந்த உன் நினைவு மட்டும்
எம் நெஞ்சில் மாறாமல் உள்ளது
ஆண்டவன் அழைத்திட்ட பின்னாலே
அழுகிறது இதயம் வெறுமையாகவே
கலைந்து செல்லும் மேகமென
காலங்கள் கடந்து போகின்றனவே ஆனாலும்
உன் நினைவுகள் புயலென எரிமலையென
கடலலையென எம் மனங்களில்
பொங்கிப்பிரவாகித்துக் கொண்டே இருக்கும்
வாழ்ந்த கதை முடியுமுன்னே- நீ
வாழாமல் மாய்ந்ததேனடா?
நூறாண்டு போனாலும் உன் நிலவு முகம் தேயாதடா!
உன் நினைவுகள் தரும் கண்ணீர் இவ்வுலகில்
நாம் வாழும் வரை வற்றிப் போகாது.
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம் !!

இன்பர்சிட்டி,
பருத்தித்துறை.

தோற்றம் 31.12.1998 மறைவு 05.11.2022

தகவல்: குடும்பத்தினர் (C-1519)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1525)

076 825 7716 (ஆகாஸ்)

யாழ்ப்பாணம் - சென்னை
விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
38,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (519)

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

நீங்களும் விரைவில் அமெரிக்காவில். நாளையுடன் பதிவுகள் நிறைவடைகின்றன 07-11-2024

அமெரிக்க அதிஸ்ட விசா

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

55000 இலவச விசாக்கள்

0768226244

V2 Travels

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு 0777469777 | வவுனியா 0743900350 | மட்டக்களப்பு 0743900352 | திருகோணமலை 0768226237 | மன்னார் 0743900353 | முல்லைத்தீவு 0743900351 |
| பருத்தித்துறை 0764550673 | கிளிநொச்சி 0768226240 | யாழ்ப்பாணம் 0768226243 | யாழ்ப்பாணம் 0777063777 | | 0764550675 |
| சாவகச்சேரி 0768226242 | மானிப்பாய் 0768226238 | சங்கானை 0777726322 | கொடிகாமம் 0764550674 | | 0777718122 |
| புத்தூர் 0764550671 | நெல்லியடி 0776699892 | ஏனைய மாவட்டங்கள் 0768226236 | | | 0776697960 |

என்கனவு யாழ்
## இருப்பியல்
வைத்த் தலைமை கொள்



| 2015-2019 | 2020-2024 |
|---|---|
| 65,560+ மொத்த திட்டங்கள் | 20,268+ மொத்த திட்டங்கள் |
| ரூ 1,984,308,000 மொத்த நிதி ஒதுக்கீடு | ரூ 4,533,308,077 மொத்த நிதி ஒதுக்கீடு |
| 455,170+ மொத்த பயனாளர்கள் | 444,416+ மொத்த பயனாளர்கள் |






அய்னா சிறிசுதர்சன் 2
முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்

3 இராசையா இராஜசேகரம்
ஓய்வுநிலை அதிபர் (SLPS 1), சமாதான நீதவான்

குணசேகரம் பிறேம்காந் 4
சமாதான நீதவான், மனித உரிமை செயற்பாட்டாளர்

5 தில்லைநாதர் தங்கவேலு
முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் - தென்மராட்சி

பாலகிருஸ்ணன் முகுந்தன் 6
யாழ் மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர்

7 றொபின்சன் அனுஜன்
விளையாட்டுத்துறை பயிற்றுவிப்பாளர்

வசந்தன் சுமதி 8
தலைவி - சிக்கன கடன் உதவி கூட்டுறவு சங்கம் மட்டுவில்

9 செந்திவேல் தமிழினியன்
முன்னாள் நகரசபை உறுப்பினர் - வல்வெட்டித்துறை

என்கனவு யாழ்
நோக்கிய பயணம்...

www.enkanavuyarl.lk
info@enkanavuyarl.lk
facebook.com/enkanavuyarl
facebook.com/angajan1
instagram.com/enkanavuyarl

மேலதிக விபரங்களுக்கு

என்கனவு யாழ்
## இருப்பியல்
வைத்த் தலைமை கொள்



## அங்கஜன்
இராமநாதன்

X 1

ஜனநாயக தேசியக் கூட்டணி
ප්‍රජාතන්ත්‍රවාදී ජාතික සන්ධානය
Democratic National Alliance

(C-1099)

X 1 என்கனவு யாழ் இருப்பியல் X 1 என்கனவு யாழ் இருப்பியல் X 1 என்கனவு யாழ் இருப்பியல் X 1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.